வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 256/2021

வழக்கு சாட்சி PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர், P5 MKP காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | தேவராஜன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 51 |

தேதி 25.11.2024

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது MKP காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019ம் அன்று M3 காவல்நிலையத்தில் தலைமை காவலராக 20.09.2019 ஆம்தேதி 13.00 மணி முதல் 21.00 மணி வரை ஜிப்ஸி 2 அலுவலராக இருந்தபோது, தலைமை காவலர் சோனைமுத்து அவர்கள் 20.15 மணிக்கு கைப்பேசியில் தொடர்பு கொண்டு கல்பாளையம், நேரு தெரு, நெ.28 வீட்டின் அருகே வரச்சொன்னார். நானும், என்னுடன் பணிபுரிந்த Sector 2 தலைமை காவலர் சங்கர், சம்பவ இடத்திற்கு சென்றபோது திரு. சோனைமுத்து அவர்கள் வலது பக்க சட்டை நேம் பேட்ச் கிழிக்கப்பட்டிருந்தது. என்ன நடந்தது என்று கேட்டபோது, அவர் M3 Para காவலர் திரு. ஜானகிராமன் தன்னை கைப்பேசியில் தொடர்பு கொண்டு சம்பவ இடமான நேரு தெரு, நெ.28 ற்கு சென்று விசாரணை செய்யுமாறு கூறியதாகவும், தாம் அங்கு சென்று விசாரித்தபோது அந்த வீட்டில் இருந்த தக்காளி முத்து என்பவர், நீ என்ன சினிமா போலீசா என்றும், போலீஸ்னா பெரிய மயிரா என்று கேட்டு சட்டையை பிடித்து இழுத்தபோது நேம்பேட்ச் கிழிந்துவிட்டதாக கூறினார். அவர் காலால் உதைத்ததில் கீழே விழுந்ததில் இரண்டு காலிலும் சிராய்பு காயம் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்து வெளியே வர முற்பட்டபோது, காலால் எட்டி உதைத்ததில் கீழே விழுந்தததில் வலதுகை சுண்டுவிரல் அடிபட்டு வீக்கம் இருந்தது. அவரை உள்ளே சென்று தேடி பார்த்தபோது எதிரி அங்கு இல்லை. ஓடிவிட்டார்.

சோனைமுத்துவை திரும்ப பார்த்தால் உன்னை கொன்றுவிடுவேன் என மிரட்டியதாக எதிரி சோனைமுத்துவை மிரட்டியதாக சோனைமுத்து என்னிடம் கூறினார். பின்னர், சோனைமுத்து காவல் நிலையம் நானும், தலைமை காவலர் சங்கரும், அழைத்து சென்றோம். உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார். நடந்ததை கூறினேன்.

**குறுக்கு விசாரணை**

எங்கள் காவல் நிலையத்தில் எத்தனை ரோந்து ஜிப்ஸி வாகனங்கள் உள்ளது என்றால் இரண்டு. நான் எந்த ஜிப்ஸி வாகனத்தில் சென்றேன் என்றால் ஜிப்ஸி இரண்டில். புகார்தாரர் எந்த ஜிப்ஸி வாகனத்தில் சென்றார் என்றால் ஜிப்ஸி ஒன்றில். குறைந்தது எத்தனை நபர்கள் ஒரு ஜிப்ஸி வாகனத்தில் செல்வோம் என்றால் ஒரு டிரைவர், ஒரு இன்சார்ஜ். அன்று வாகனம் பழுதானதால் அவர் இருசக்கர வாகனத்தில் சென்றார். எனது வாக்குமூலத்தில் அன்று ஜிப்ஸி பழுதானதால், இருசக்கர வாகனத்தில் சோனைமுத்து சென்றார் என கூறியுள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 எனக்கு நேரடியாக சம்பவத்தை சொன்னாரா , அல்லது காவல் நிலையத்தில் கூறினார்களா என்றால் அ.சா.1 கூறினார். நான் சம்பவம் நடந்து முடிந்தபின்புதான் சம்பவ இடம் சென்றேன் என்றால் ஆமாம். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். அ.,சா,.1 கூறியதை வைத்துதான் சம்பவ இடம் சென்றேன் என்றால் ஆமாம். புகார் யார் அளித்தார் என்றால் அ.சா.1. சம்பவ இடம் சுற்றிலும், மக்கள் வசிப்பிடம் என்றால் ஆமாம். அ.சா.,1 நான் கூறுவதுபோல், சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அ.சா.1 அளித்த பொய்யான புகாருக்கு அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.